அசல் வழக்கு எண். 262/2019 தேதி 22-02-2024

வா.சா.1- மாறன்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது தந்தை பெரியசாமி. தாவா சொத்திற்கு எனது தந்தை பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை இறந்துவிட்டார். எனது தந்தைக்கு இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் மக்கள். எனது சகோதரரி ஜோதிலெட்சுமியை தவிர என் உடன் பிறந்தவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. தாவா சொத்திற்கு என் தந்தை பெயரில் உள்ள பட்டாவை தவிர வேறு மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து வீடு மற்றும் மனை ஆகும். தாவா சொத்து எனது பாட்டா ஆண்டியப்பனுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து என் தந்தைக்கு தனிப்பட பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது பாட்டா ஆண்டியப்பன் பெயரில் தாவா சொத்து இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எனது பாட்டா ஆண்டியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ச ரியல்ல. எனது பாட்டா ஆண்டியப்பனுக்கு 5 மகன்கள் மற்றும் 4 மகள்கள். அவர்கள் யாரும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. தாவா சொத்து எனது பாட்டா ஆண்டியப்பனுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**